# ஒமைக்ரான் எம்ஆர்என்ஏ பூஸ்டர் தடுப்பு மருந்து அறிமுகம்

**புது தில்லி, ஜூன் 24:** ஒமைக்ரான் தீநுண்மிக்கு எதிராக செலுத்த உருவாக்கப்பட்டுள்ள எம்ஆர்என்ஏ பூஸ்டர் (மூன்றாவது தவணை) தடுப்பு மருந்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் சனிக்கிழமை அறிமுகப்படுத்தினார்.

கரோனா தீநுண்மி வகைகளில் ஒன்றான ஒமைக்ரான் தீநுண்மிக்கு எதிராக மூன்றாவது தவணையாக செலுத்திக்கொள்ள 'ஜெம்கோவாக்-ஓம்' என்ற எம்ஆர்என்ஏ பூஸ்டர் தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் புணேவைச் சேர்ந்த ஜெனோவா பயோஃபார்மாசூட்டிக்கல்ஸ் நிறுவனம் இந்த மருந்தை உருவாக்கியுள்ளது.

இது உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் எம்ஆர்என்ஏ தடுப்பு மருந்தாகும். அதனை அவசர கால அடிப்படையில் பயன்படுத்த இந்திய மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரகம் அண்மையில் அனுமதி அளித்தது.

இந்தத் தடுப்பு மருந்தை தில்லியில் மத்திய இணையமைச்சர் ஜிதேந்திர சிங் சனிக்கிழமை அறிமுகப்படுத்தினார். இதைத்தொடர்ந்து அவர் கூறுகையில், 'ஜெம்கோவாக்-ஓம் தடுப்பு மருந்தை ஊசியில்லாமல் செலுத்த முடியும். இந்த மருந்தை சேமித்து வைக்க குளிர்பதன வசதி தேவையில்லை. இது நாட்டின் தொலைதூர பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று பயன்படுத்த எளிதானது' என்று தெரிவித்தார்.

# ஆஸ்கர் விருது விதிகளில் மாற்றம்

**லாஸ் ஏஞ்சலீஸ், ஜூன் 24:** சிறந்த திரைப்படத்துக்குரிய ஆஸ்கர் விருதுக்கான விதிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரைத் துறையின் உயரிய விருதாக ஆஸ்கர் கருதப்படுகிறது. ஆண்டுதோறும் பல்வேறு பிரிவுகளின் கீழ் ஆஸ்கர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், சிறந்த திரைப்படத்துக்கான ஆஸ்கர் விருதுக்குரிய தகுதிப்பாடு விதிகள் மாற்றப்பட்டுள்ளன.

இதுவரை, அமெரிக்காவின் நியூயார்க், லாஸ் ஏஞ்சலீஸ், சிகாகோ, அட்லான்டா, சான் பிரான்சிஸ்கோ, மியாமி ஆகிய 6 நகரங்களில் ஏதாவதொன்றில் அமைந்துள்ள திரையரங்கில் ஒரு வாரத்துக்குத் திரையிடப்பட்ட திரைப்படங்கள், சிறந்த திரைப்படத்துக்கான ஆஸ்கர் விருது போட்டிக்குத் தகுதிபெறும். அந்த விதி தற்போது மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்ட விதியுடன் சேர்த்து அமெரிக்காவின் தலைசிறந்த 50 திரைச்சந்தை நகரங்களில் குறைந்தபட்சம் 10 நகரங்களில் உள்ள திரையரங்கில் ஒரு வாரத்துக்குத் திரைப்படம் திரையிடப்பட்டிருக்க வேண்டும் என அகாதெமி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திரைப்படங்கள் எந்த நேரத்தில் திரையரங்கில் திரையிடப்பட வேண்டும் என்பதற்கான விதிகளிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய விதிகள் 2025-ஆம் ஆண்டுக்கான ஆஸ்கர் விருதில் இருந்து நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 24 மணி நேரம் உழைக்கும் இல்லத்தரசிகளுக்கு கணவர் சொத்தில் சம உரிமை

**சென்னை உயர்நீதிமன்றம்**

**சென்னை, ஜூன் 24:** குடும்ப உழைப்பில் 24 மணி நேரமும் ஈடுபடும் ஊதியம் பெறாத பெண்களுக்கு கணவர் ஈட்டிய சொத்தில் சம உரிமை இருப்பதாக சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் பணியாற்றிய கண்ணையன் நாயுடு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றில் மேல்முறையீடு செய்துள்ளார்.

அதில், 'நான் வெளிநாட்டில் 1983 முதல் 1994 வரை சம்பாதித்த பணத்தில் வாங்கிய சொத்துகள் அனைத்தையும் தனக்கு மட்டுமே அனுபவிக்க உரிமை உள்ளது. அதில் யாரும் உரிமை கோர முடியாது. ஆனால், கீழமை நீதிமன்றம் எனது மனைவிக்கும் பங்கு உள்ளது எனத் தீர்ப்பளித்துள்ளது. அதனால், கீழமை நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்' எனத் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி அளித்த உத்தரவு: கணவர் சம்பாதிப்பதும், மனைவி, குழந்தைகள் மற்றும் குடும்பத்தைக் கவனிப்பதும் பொதுவானது. குடும்பத்தை மனைவி கவனிப்பதால்தான் கணவரால், தனது பணியை முழு மன நிறைவோடு செய்ய முடிகிறது. கணவரின் சம்பாத்தியத்தில் வாங்கும் சொத்தில் மனைவிக்கும் சம பங்கு பெற உரிமை உள்ளது.



கணவர், தனது மனைவிக்கு அன்பாக வாங்கித்தரும் நகைகள் மற்றும் புடவைகள், பரிசுப் பொருள்கள் அனைத்தும் அவரது விருப்பத்தின் பேரில் பரிசளிக்கப்படுகின்றன.

மேலும் அதை தான் சம்பாதித்து வாங்கியது என்பதால் அதை மீண்டும் கேட்க உரிமையில்லை. கணவர் தான் மட்டுமே சம்பாதித்தது என்பதற்காக மனைவிக்கான பாதி உரிமையை மறுக்க முடியாது.

இல்லத்தரசிகள் தங்கள் குடும்பத்தையும், குழந்தைகளையும் கவனிப்பதன் மூலம், குடும்ப மருத்துவர் போல 24 மணி நேரமும், விடுமுறையின்றி மேற்கொள்ளும் பணியை சம்பாத்தியத்துக்காக கணவர் பார்க்கும் 8 மணி நேர வேலையுடன் ஒப்பிட முடியாது.

கணவரும் மனைவியும் குடும்ப வாகனத்தின் இரட்டை சக்கரங்கள்; கணவர் சம்பாத்தியத்தின் மூலம் தன் பங்கை வழங்கினால், குடும்பத்தைக் கவனிப்பதன் மூலம் மனைவி தன் பங்களிப்பை வழங்குகிறார். அதனால் சொத்தில் மனைவிக்கும் சம பங்கு பெற உரிமை உண்டு என உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இல்லத்தரசிகள் குடும்பத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ கவனித்து தாம் அளிக்கும் பங்களிப்பை அங்கீகரித்து எந்த சட்டமும் இதுவரை இயற்றப்படவில்லை எனத் தெரிவித்த நீதிபதி, அந்தப் பங்களிப்பை நீதிமன்றம் அங்கீகரிப்பதற்கு எந்தச் சட்டமும் தடை விதிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ரஷியாவில் திடீர் ஆயுதக் கிளர்ச்சி

**மாஸ்கோ, ஜூன் 24:** ரஷிய ராணுவத் தலைமைக்கு எதிராக, அந்த நாட்டின் தனியார் துணை ராணுவப் படையான வாக்னர் குழு ஆயுதக் கிளர்ச்சியைத் தொடங்கியுள்ளது.

ரஸ்தாவ் மற்றும் விரோனெஷ் மாகாணங்கள் வழியாக அந்தப் படையினர் தலைநகர் மாஸ்கோவை நோக்கி முன்னேறியது மிகுந்த பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

'அதிபர் புதினின் படை' என்று வர்ணிக்கப்பட்டு வந்த அந்தப் படை, இதுவரை ரஷியாவுக்காக பல்வேறு நாடுகளில் போரிட்டு வந்தது. எனினும், அண்மைக் கால உக்ரைன் போரில் ராணுவ உயரதிகாரிகள் தவறான முடிவுகளை எடுத்து வருவதாக குற்றஞ்சாட்டி வந்த வாக்னர் குழு தலைவர் யெவ்கெனி ப்ரிகோஷின், அவர்களுக்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சியை தற்போது அறிவித்துள்ளார்.

சனிக்கிழமை இரவு அவர் வெளியிட்ட அறிக்கையில், உக்ரைனில் சண்டையிட்டு வந்த தாங்கள் அங்கிருந்து ரஷிய எல்லைக்குள் நுழைந்துள்ளதாகவும், ரஸ்தாவ் பகுதிக்குச் சென்று ரஸ்தாவ்-ஆன்-டான் நகரிலுள்ள பிராந்திய ராணுவ தலைமையகத்தைக் கைப்பற்றிவிட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கேய் ஷொய்குவும், ராணுவ தலைமைத் தளபதி வேலரி கெரசிமொவும் ரஸ்தாவ் நகரில் தன்னை நேரில் சந்திக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

முன்னதாக, உக்ரைனில் ரஷியாவுக்கு ஆதரவாக சண்டையிட்டு வந்த தங்களது படையினர் தங்கியிருந்த முகாம் மீது ரஷிய ராணுவம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகவும், இதில் ஏராளமான வீரர்கள் உயிரிழந்ததாகவும் வெள்ளிக்கிழமை வெளியிட்ட விடியோ அறிக்கையில் அவர் கடுமையாகக் குற்றஞ்சாட்டினார்.

## ராணுவத்துக்கு எதிராக வாக்னர் குழு போர்க் கொடி



ரஷியாவின் ரஸ்தாவ்-ஆன்-டான் பகுதியில் பாதுகாப்புக்காக சனிக்கிழமை நிறுத்தப்பட்டிருந்த பீரங்கி.

தங்கள் மீது தாக்குதல் நடத்திய ராணுவத் தலைமை ஒரு தீயசக்தி எனவும், அது உடனடியாக அகற்றப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

எனினும், அவரது குற்றச்சாட்டை ரஷிய பாதுகாப்புத் துறை அமைச்சகம் திட்டவட்டமாக மறுத்தது.

ப்ரிகோஷினின் அளிக்கும் தகவல் பொய்யானது எனவும், பதற்றத்தைத் தூண்டக்கூடியது எனவும் அமைச்சகம் தெரிவித்திருந்தது.

இந்தச் சூழலில், ரஷிய எல்லைக்குள் புகுந்து ரஸ்தாவ் பகுதி ராணுவத் தலைமையகத்தைக் கைப்பற்றிய வாக்னர் படை, அதிக எதிர்ப்பின்றி விரோனெஷ் மாகாணத்தையும் கடந்து தலைநகர் மாஸ்கோவை நோக்கி முன்னேறி வருகிறது.

இடையில் வாக்னர் படையினரின் வாகனங்கள் மீது ரஷிய விமானப் படை ஹெலிகாப்டர்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியானாலும், நெடுஞ்சாலைகளில் பெரும்பாலும் பெரிய அளவில் எதிர்ப்பு இல்லாமல் வாக்னர் படையினர் முன்னேறி வருவதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து யெவ்கெனி ப்ரிகோஷின் கூறுகையில், 'ஒரு துப்பாக்கிக் குண்டைக் கூட சுடாமல், ரத்தம் சிந்தாமல் ரஸ்தாவ் பிராந்திய ராணுவத் தலைமையகத்தைக் கைப்பற்றினோம்' என்று குறிப்பிட்டார்.

எனினும், இது தொடர்பாக உண்மை நிலவரம் குறித்து நம்பகத் தன்மை வாய்ந்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

வாக்னர் குழுவினரின் ஆயுதக் கிளர்ச்சியில் தங்கள் தரப்பில் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக ரஷியாவும் இதுவரை தெரிவிக்கவில்லை.

கிழக்கு உக்ரைனின் பாக்முத் நகரில் உக்ரைன் ராணுவத்துடன் மிக நீண்ட காலமாக கடும் போரில் ஈடுபட்டு வந்த வாக்னர் படை, ஆயிரக்கணக்கான வீரர்களை இழந்ததாகக் கூறப்படுகிறது.

**உலகத் தலைவர்களுடன் ஜோ பைடன் ஆலோசனை:** ரஷியாவில் நிலவும் சூழல் குறித்து பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான், ஜெர்மனி பிரதமர் ஓலாஃப் ஷோல்ஸ், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் ஆகியோருடன் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சனிக்கிழமை ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில், '4 தலைவர்கள் பங்கேற்ற உரையாடலின் போது உக்ரைனுக்கு தங்கள் ஆதரவை தலைவர்கள் மீண்டும் உறுதிபடுத்தினர். ரஷியாவின் நிலைமை குறித்து ஆராய்வதில் அமெரிக்க அதிகாரிகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கின்றனர். ரஷியாவின் உள்நாட்டு மோதலில் அமெரிக்கா தவறான நிலை எடுப்பதை அதிகாரிகள் தவிர்க்க விரும்புகின்றனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் உக்ரைனுக்கு திரும்ப உத்தரவு

ரஷிய தலைநகர் மாஸ்கோவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த வாக்னர் படைகளை மீண்டும் உக்ரைன் முகாம்களுக்குத் திரும்புமாறு அதன் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஷின் உத்தரவிட்டார். ஆயுதக் கிளர்ச்சியின் எதிரொலியாக நகரின் தெற்கு வாயில்களில் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டு மாஸ்கோவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், ரஷியர்கள் ரத்தம் சிந்துவதைத் தவிர்க்க மாஸ்கோவிலிருந்து 200 கி.மீ. தொலைவில் உள்ள தனது வீரர்களைத் திரும்ப பெற்றுக்கொள்வதாக யெவ்கெனி ப்ரிகோஷின் அறிவித்துள்ளார்.

முன்னதாக, இவ்விவகாரம் குறித்து அதிபர் புதினுடன் விவாதித்த பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகஷென்கோ, யெவ்கெனி ப்ரிகோஷினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். உக்ரைனில் வாக்னர் படைகளுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டதையடுத்து, தனது படையின் முன்னேற்றத்தை நிறுத்த ப்ரிகோஷின் ஒப்புக்கொண்டார் என பெலாரஸ் அதிபர் மாளிகை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## 'தேசத் துரோகம்!'



ஆயுதக் கிளர்ச்சி குறித்த அறிவிப்பை வாக்னர் தலைவர் வெளியிட்டதைத் தொடர்ந்து, நாட்டு மக்களிடையே ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் தொலைக்காட்சியில் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: ரஷிய ராணுவத்துக்கு எதிராக வாக்னர் குழு மேற்கொண்டுள்ள ஆயுதக் கிளர்ச்சி தேசத் துரோகச் செயலாகும். இந்த நடவடிக்கை மூலம் ரஷியாவின் முதுகில் அந்தப் படை குத்தியுள்ளது. இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடும் எந்தவொரு நபரும் தண்டிக்கப்படுவார்.

ரஷியாவை பாதுகாப்பதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் என்றார் அவர்.

## தீமைப் பாதையின் விளைவு



ரஷிய ராணுவத்துக்கு எதிரான வாக்னர் படையின் ஆயுதக் கிளர்ச்சி ரஷியாவின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. தீமைப் பாதையைத் தேர்ந்தெடுக்கும் எவரும், தாங்களே அழிந்து போவார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம் - **உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி.**

## யார் இந்த வாக்னர் குழுவினர்?



வாக்னர் குழு என்று பொதுவாக அழைக்கப்படும் 'வாக்னர் பிஎம்சி (பிரைவேட் மிலிட்டரி கம்பெனி)', ரஷியாவை சேர்ந்த தனியார் ராணுவ நிறுவனமாகும்.

அதன் தலைவராக யெவ்கெனி ப்ரிகோஷின் **(படம்)** உள்ளார்.

தன்னார்வலர் படையினரைக் கொண்டு ஒப்பந்த முறையில் போர் நடவடிக்கைகளில் இந்த நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

ரஷிய சட்டத்தின் கீழ் தனியார் ராணுவ நிறுவனங்கள் செயல்படுவதற்கு அனுமதி இல்லையென்றாலும், ரஷிய அரசின் நலன்களுக்காக வாக்னர் குழு போரிட்டு வருவதால் அந்தப் படையினருக்கு ஆயுதங்களையும், பயிற்சியளிப்பதற்கான வசதிகளையும் ரஷிய பாதுகாப்புத் துறை அமைச்சகம் நேரடியாக வழங்கி வருகிறது.

இதன் காரணமாக, ரஷியாவின் மறைமுக துணை ராணுவப் படை எனவும், அதிபர் விளாதிமீர் புதினின் தனியார் ராணுவம் எனவும் வாக்னர் படை வர்ணிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் ரஷியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் அந்த நாட்டு ராணுவ வீரர்களின் மீது பழியோ, போர்க் குற்றச்சாட்டுகளோ சுமத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக அங்கு வாக்னர் படையை ரஷிய அரசு பயன்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

# ஒரே நேரத்தில் 1,600 மாணவர்கள் சிலம்பாட்டத்தில் ஈடுபட்டு உலக சாதனை

**சென்னை,ஜூன் 24:** சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினத்தையொட்டி, சென்னை எழும்பூரில் 1,600 மாணவர்கள் சிலம்பாட்டத்தில் ஈடுபட்டு உலக சாதனை செய்தனர்.

தமிழக காவல் துறையின் சார்பில் சர்வதேச போதை பொருள் ஒழிப்பு தினத்தையொட்டி, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் விழிப்புணர்வு சிலம்பாட்ட போட்டி சனிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த 1,600 பள்ளி மாணவ-மாணவிகள் ஒரே நேரத்தில் சிலம்பாட்டத்தில் ஈடுபட்டு சாதனை புரிந்தனர்.

1,600 பள்ளி மாணவ, மாணவிகள் ஒரே நேரத்தில் சிலம்பம் நிகழ்ச்சியை நடத்தியதற்காக 'வேர்ல்டு ரெகார்டு யூனியன்' (World Record Union) அமைப்பினர் உலக சாதனை விருதை வழங்கினர். இந்த விருதை அந்த அமைப்பின் நிர்வாகிகளிடம் இருந்து பெற்ற தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குற்றம் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு ஏடிஜிபி மகேஷ்குமார் அகர்வாலிடம் வழங்கினார்.



சர்வதேச போதைபொருள் ஒழிப்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் உலக சாதனைக்காக சனிக்கிழமை நடைபெற்ற 1600 பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்ற சிலம்பாட்டம்.

இதைத்தொடர்ந்து அங்கு புதிதாக கட்டப்பட்ட கூடைப்பந்து மைதானம் திறப்பு விழா பெருநகர காவல் துறை ஆணையர் சங்கர் ஜிவால் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற உதயநிதி ஸ்டாலின், கூடைப்பந்து மைதானத்தை திறந்து வைத்து, விளையாட்டு உபகரணங்களை காவலர்களுக்கு வழங்கினார்.

**மன அழுத்தத்தை குறைக்கும்:** நிகழ்ச்சியில் உதயநிதி ஸ்டாலின் பேசியது: திமுக அரசு காவல் துறைக்கு என்றென்றும் நண்பனாக இருக்கும். போலீஸாரின் பணி கடுமையானது. சட்டம்-ஒழுங்கை பாதுகாப்பதிலும், பொதுமக்களின் பிரச்னைகளை தீர்ப்பதிலும் முதல் ஆளாக களத்தில் நிற்பது போலீஸார் தான்.

போலீஸார் விளையாட்டில் ஈடுபடுவது அவர்களுடைய மன அழுத்தத்தை வெகுவாக குறைக்கும். எனவே நேரம் கிடைக்கும்போது, போலீஸார் விளையாட வேண்டும். போலீஸார் விளையாட்டு போட்டிகளில் சாதிப்பதற்கு என்ன வேண்டும் என்றாலும், விளையாட்டு மேம்பாட்டு துறையிடம் கேட்டால் நடவடிக்கை எடுக்கப்படும். அதை செய்து தருவதற்கு எங்கள் துறை எப்போதும் தயாராக இருக்கும் என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையர்கள் பிரேம் ஆனந்த் சின்ஹா, இணை ஆணையர் ஜெ.லோகநாதன், ஆயுதப்படை ஐஜி ஏ.ராதிகா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# எழும்பூர், திருவல்லிக்கேணி பகுதிகளில் நவீன கண்காணிப்பு கேமராக்கள்

## காவல் ஆணையர் தொடங்கி வைத்தார்

**சென்னை, ஜூன் 24:** சென்னை எழும்பூர், திருவல்லிக்கேணி பகுதிகளில் புதிதாக பொருத்தப்பட்ட 129 நவீன கண்காணிப்பு கேமராக்களின் சேவையை பெருநகரக் காவல் ஆணையர் சங்கர் ஜிவால் சனிக்கிழமை தொடங்கி வைத்தார்.

காவல் துறையின் மூன்றாவது கண் என்றழைக்கப்படும் கண்காணிப்பு கேமராக்கள் சென்னை முழுவதும் பொருத்தப்பட்டுள்ளன. தற்போது நவீன தொழில் நுட்பத்துடன் பொருத்தப்படுகின்றன.

இதன் ஒருபகுதியாக திருவல்லிக்கேணி, எழும்பூர் பகுதிகளில் 43 இடங்களில் தனியார் உதவியுடன் புதிதாக 129 நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டன.

இந்த கேமராக்கள் பதிவு செய்யும் விடியோக்கள் மிகவும் தரமானதாக இருக்கும். கேமராக்கள் இயங்கவில்லை என்றாலோ, சேதப்படுத்தப்பட்டாலோ தானியங்கி மூலம் 'மின்னஞ்சல்' முகவரிக்கு எச்சரிக்கை செய்யும் வசதி உள்ளது.



சென்னை திருவல்லிக்கேணி, எழும்பூர் காவல் சரகத்தில் புதிதாக பொருத்தப்பட்டுள்ள 129 சிசிடிவி கேமராக்களின் இயக்கத்தை சனிக்கிழமை தொடங்கிவைத்த சென்னை பெருநகரக் காவல் ஆணையர் சங்கர் ஜிவால். உடன், கூடுதல் ஆணையர் (தெற்கு) பிரேம் ஆனந்த் சின்ஹா, கிழக்கு மண்டல காவல் இணை ஆணையர் திஷா மிட்டல், திருவல்லிக்கேணி காவல் துணை ஆணையர் தேஷ்முக் சேகர் சஞ்சய்.

இந்த கேமராக்களில் 'வை-பை' வசதியும் இருக்கிறது.

இந்தக் கண்காணிப்பு கேமராக்களின் சேவை தொடக்க விழா, எழும்பூர் போலீஸ் மெஸ் அருகே சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற சென்னை பெருநகரக் காவல் ஆணையர் சங்கர் ஜிவால், கண்காணிப்பு கேமராக்கள் சேவையைத் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, இந்த விழாவில் கூடுதல் காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா, காவல் இணை ஆணையர்கள் திஷா மிட்டல், சிபி சக்ரவர்த்தி, துணை ஆணையர் தேஷ்முக் சேகர் சஞ்சய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

EVA STALIN

# ஹூஸ்டன் பல்கலை.யில் இந்திய அரசின் உதவியுடன் தமிழ் இருக்கை

## பிரதமர் மோடி

**வாஷிங்டன், ஜூன் 24:** 'அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் இந்திய அரசின் உதவியுடன் தமிழ் இருக்கை அமைக்கப்படும்' என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் உள்ள ரொனால்ட் ரீகன் கட்டடம் மற்றும் சர்வதேச வர்த்தக மையத்தில், இந்திய வம்சாவளியினர் பங்கேற்ற நிகழ்ச்சியில் அவர் வெள்ளிக்கிழமை பேசியதாவது:

உலகின் வளர்ச்சிக்கு இந்தியாவின் பலம் எவ்வாறு புதிய திசையைக் காண்பிக்கிறது என்பதைப் பார்த்து அமெரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளியினர் பெருமிதம் அடைந்துள்ளனர்.

தற்போது வேகமான பொருளாதார வளர்ச்சி காணும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. ஒட்டுமொத்த உலகமும் இந்தியாவை கவனித்து வருகிறது. இந்தியா நூற்றாண்டுகளாக அடிமைத்தனத்தில் இருந்தது. அந்த அடிமைத்தனம் இந்தியாவின் தன்னம்பிக்கையைப் பறித்தது.

ஆனால், தற்போதைய புதிய இந்தியா அந்த தன்னம்பிக்கையைத் திரும்பப் பெற்றுள்ளது. தனது பாதை மற்றும் திசை எது வென்பதை புதிய இந்தியா அறிந்துள்ளது.

தனது முடிவுகள் மற்றும் தீர்மானத்தில் புதிய இந்தியாவுக்கு குழப்பம் இல்லை. தனது ஆற்றலை செயல்திறனாக புதிய இந்தியா மாற்றி வருகிறது.

இந்தியாவில் உள்ள பல இரண்டு மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் நாட்டின் புதிய வளர்ச்சிக் கதை எழுதப்பட்டு வருகிறது என்பதை எடுத்துரைக்க மிகப் பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்கட்டமைப்பில் முன்னெப்போதும் இல்லாத அளவு இந்தியா முதலீடு செய்து வருகிறது. அதேவேளையில், முன்னெப்போதும் இல்லாத எண்ம (டிஜிட்டல்) புரட்சியும் ஏற்பட்டுள்ளது.

**தமிழ் 'உலகின் பழைமையான மொழி':** அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் இந்திய அரசின் உதவியுடன் தமிழ் இருக்கை அமைக்கப்படும். தமிழ் 'உலகின் பழைமையான மொழி' என்பதில் இந்திய வம்சாவளியினர் பெருமிதம் கொள்ளவேண்டும்.

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கடத்தப்பட்ட 100-க்கும் மேற்பட்ட சிலைகளை, இந்தியாவிடம் திருப்பி அளிக்க அமெரிக்க அரசு மேற்கொண்ட முடிவு மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியா மற்றும் இந்தியர்களின் உணர்வுகளுக்கு அமெரிக்க அரசு மதிப்பளிப்பது இரு நாடுகளுக்கு இடையிலான உறவை மேலும் வலுவடையச் செய்கிறது.

இந்தியா-அமெரிக்கா இடையிலான உறவின் புதிய மற்றும் ஒளிமயமான பயணம் தொடங்கியுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான கூட்டுறவு என்பது 21-ஆம் நூற்றாண்டில் மீண்டும் சிறப்பான உலகை ஏற்படுத்துவதற்கான உறவாகும். உலகப் பிரச்னைகளில் இரு நாடுகளும் ஒன்றிணைந்துள்ளன. 'இந்தியாவில் தயாரிப்போம், உலகுக்குத் தயாரிப்போம்' முயற்சிகளுக்கு இரு நாடுகளுக்கு இடையே வளரும் உறவு ஊக்கமளிக்கும்.

ஜனநாயகத்தின் தாய் இந்தியா. நவீன ஜனநாயகத்தில் வாகை சூடிய நாடு அமெரிக்கா. இருபெரும் ஜனநாயகங்கள் இடையிலான உறவு வலுப்பட்டு வருவதை உலகம் கவனித்து வருகிறது.

அமெரிக்க அதிபர் பைடன் அனுபவமிக்க, நம்பிக்கை கொண்ட தலைவர். இந்தியா-அமெரிக்கா இடையிலான உறவை புதிய உச்சத்துக்கு கொண்டு செல்வதில், அவரின் முயற்சிகளைப் பகிரங்கமாக பாராட்டுகிறேன். இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து கொள்கைகள், ஒப்பந்தங்களை மட்டும் உருவாக்கவில்லை. இரு நாடுகளும் வாழ்க்கையை, கனவுகளை, தலையெழுத்தை வடிவமைக்கின்றன.

இந்தியா-அமெரிக்கா கூட்டுறவின் முழுத் திறனும் இதுவரை உணரப்படவில்லை. அந்தத் திறனை உணர அமெரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளியினர் மிகப் பெரிய பங்காற்றுவார்கள் என்றார் அவர்.

புதிய ஆணையர்கள் பொறுப்பேற்றும்

# புதுப்பிக்கப்படாத தகவல் ஆணைய இணையதளம்

**சென்னை, ஜூன் 24:** புதிய ஆணையர்கள் பொறுப்பேற்ற பிறகும், தகவல் ஆணையத்தின் இணையதளம் இன்னும் புதுப்பிக்கப்படாத நிலையிலேயே உள்ளது. இதனால், இணையதளத்தில் இருந்து புதிய தகவல்கள் எதையும் பெற முடியாமல், தகவல் பெறும் உரிமைச் சட்ட ஆர்வலர்கள் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், மாநிலத்தில் கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ்நாடு தகவல் ஆணையம் உருவாக்கப்பட்டது. இந்த ஆணையத்தை ஒரு தலைவர் மற்றும் 6 ஆணையர்கள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர்.

இந்த ஆணையத்தின் முதல் தலைமை ஆணையராக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ். ராமகிருஷ்ணன் பொறுப்பேற்றார்.

அவரைத் தொடர்ந்து, முன்னாள் தலைமைச் செயலர் கே.எஸ்.ஸ்ரீபதி, ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி கே.ராமானுஜம், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி எம்.ஷீலா பிரியா ஆகியோர் பொறுப்பு வகித்தனர். அவரைத் தொடர்ந்து, ஆளுநரின் செயலராக இருந்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர். ராஜகோபால், தலைமை தகவல் ஆணையராகச் செயல்பட்டு வந்தார். அவர் வயது மூப்பு காரணமாக கடந்த ஆண்டு ஓய்வு பெற்றார். தொடர்ந்து, 4 தகவல் ஆணையர்களும் ஓய்வு பெற்றனர்.

அப்போது முதல், தகவல் ஆணையத்தின் இணையதளம் புதுப்பிக்கப்படாமல் இருந்து வந்தது.

தகவல் ஆணையர்களாக உள்ள பி.தனசேகரன், எம்.ஸ்ரீதர் ஆகியோர் மட்டும் தகவல் ஆணையத்துக்கு வரும் மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்து வருகின்றனர். அவர்கள் விசாரிக்கும் வழக்கு விவரப் பட்டியல்கள் மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

**புதியவர்கள் பதவியேற்பு:** தகவல் ஆணையத்தின் தலைமை ஆணையராக ஷகில் அக்தர் மற்றும் தகவல் ஆணையர்களாக 4 பேர் அண்மையில் பொறுப்பேற்றனர். அவர்கள் தங்களது பணிகளைத் தொடங்கியுள்ளனர். ஆனாலும், அந்த இணையதளம் புதுப்பிக்கப்படாமல் இருப்பதாக தகவல் பெறும் உரிமைச் சட்ட ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

முகப்புப் பக்கத்தில் மட்டும் ஆளுநருடன், புதிய தலைமை ஆணையர், 4 தகவல் ஆணையர்கள் இருக்கும் புகைப்படம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மற்றபடி, தகவல் ஆணையர்கள் குறித்த விவரங்களோ, அவர்கள் பதவியேற்ற பிறகு விசாரித்த மேல்முறையீட்டு வழக்குகள் குறித்த நிலையோ பதிவேற்றம் செய்யப்படவில்லை என அவர்கள் புகார் கூறுகின்றனர்.

**கடந்த ஆண்டு நவம்பரா?** இதனிடையே, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் இணையதளத்தில் இது குறித்த விவரங்களைப் பார்த்தபோது, அதில், கடைசியாக விவரங்களைப் புதுப்பித்த தேதி எனக் குறிப்பிட்டு, 'கடந்த ஆண்டு நவம்பர் 18' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தகவல் ஆணையத்தில் விவரங்கள் ஏதும் கடந்த ஆண்டு நவம்பர் 18-ஆம் தேதிக்குப் பிறகு புதுப்பிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

இது குறித்து தகவல் ஆணைய வட்டாரங்களிடம் விசாரித்தபோது, பயனர் குறியீடு, கடவுச்சொல் ஆகியவற்றில் பிரச்னை இருப்பதால் பதிவேற்றம் செய்வதில் தாமதம் ஏற்படுவதாகவும், விரைவில் சிக்கல் தீர்க்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

# எகிப்தில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு

## அதிபர் எல்-சிசியுடன் இன்று சந்திப்பு

**கெய்ரோ, ஜூன் 24:** அமெரிக்க அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்ட பிரதமர் நரேந்திர மோடி, சனிக்கிழமை எகிப்து சென்றடைந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்நாட்டு அதிபர் அப்தெல் ஃபட்டா எல்-சிசியை ஞாயிற்றுக்கிழமை சந்திக்கும் பிரதமர் மோடி, பல்வேறு துறைகளில் இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்துவது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நடப்பாண்டு இந்தியக் குடியரசு தின விழாவில் எகிப்து அதிபர் எல்-சிசி, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அப்போது, எகிப்துக்கு வருகை தருமாறு பிரதமர் மோடிக்கு அவர் அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி எகிப்துக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்க அரசுமுறைப்பயணத்தை முடித்துக் கொண்டு வாஷிங்டனிலிருந்து புறப்பட்ட பிரதமர் மோடி, சனிக்கிழமை மாலை எகிப்து தலைநகர் கெய்ரோ வந்தடைந்தார்.

கெய்ரோ விமான நிலையத்தை வந்தடைந்த பிரதமர் மோடியை எகிப்து பிரதமர் முஸ்தபா மத்பூலி ராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்றார்.

பிரதமர் மோடி தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்கு முன் இந்திய சமூகத்தினர் திரளாகக் கூடி அவரை உற்சாகமாக வரவேற்றனர். அப்போது அவர்கள் இந்தியப் பாரம்பரிய உடைகளை அணிந்திருந்தனர். அவர்களுடன் பிரதமர் மோடி சிறிது நேரம் உரையாடினார்.

எகிப்தில் இரு நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் மோடி, அந்நாட்டு உயரதிகாரிகளைச் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நிலவி வரும் இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகப் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

**வட்டமேஜை மாநாடு:** எகிப்து பிரதமர் மத்பூலி தலைமையில் அந்நாட்டு அமைச்சர்கள் பங்கேற்கும் வட்டமேஜை மாநாட்டிலும் பிரதமர் மோடி கலந்துகொள்கிறார். எகிப்தின் தலைமை முஃப்தி (இஸ்லாமிய சட்ட நிபுணர்) சவ்கி இப்ராகிம் அப்தெல்-கரீம் அல்லாமையும் பிரதமர் மோடி சந்திக்கவுள்ளார். எகிப்தில் உள்ள தொழில் நிறுவனங்களின் தலைவர்களைச் சந்தித்து இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் மோடி அழைப்புவிடுக்கவுள்ளதாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்தார்.



எகிப்து தலைநகர் கெய்ரோவில் சனிக்கிழமை வந்திறங்கிய பிரதமர் நரேந்திர மோடியை விமான நிலையத்தில் ராணுவ மரியாதையுடன் வரவேற்ற அந்நாட்டு பிரதமர் முஸ்தபா மத்பூலி.

எகிப்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற, 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அல்-ஹகீம் மசூதியைப் பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை பார்வையிடவுள்ளார். அங்கு சுமார் அரை மணி நேரத்தைச் செலவிடவுள்ள பிரதமர் மோடி, மசூதியின் வரலாற்றுச் சிறப்புகள், பாரம்பரியம் குறித்து அறிந்துகொள்ளவுள்ளார். இந்தியாவில் உள்ள தாவூதி போரா சமூகத்தினரின் உதவியுடன் அந்த மசூதி மறுகட்டமைக்கப்பட்டது.

அல்-ஹகீம் மசூதியின் புனரமைப்புப் பணிகளில் 1970களில் இருந்தே தாவூதி போரா சமூகத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். அத்தகைய சிறப்புமிக்க மசூதியைப் பிரதமர் மோடி பார்வையிடுவது சிறப்புமிக்கதாக உள்ளதென எகிப்து சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது. முதலாம் உலகப் போரில் எகிப்து சார்பில் போரிட்டு உயிர்த்தியாகம் செய்த 3,799 இந்திய வீரர்களின் நினைவாக எழுப்பப்பட்டுள்ள ஹீலியோபோலிஸ் போர் நினைவிடத்துக்குச் சென்று பிரதமர் மோடி மரியாதை செலுத்தவுள்ளார்.

**தாவூதி போரா சமூகத்தினருடன் சந்திப்பு:** இஸ்லாமிய மதப் பிரிவினர்களில் தாவூதி போரா பிரிவினரும் அடங்குவர். அவர்கள் எகிப்தில் இருந்து புலம்பெயர்ந்து யேமனிலும், பின்னர் 11-ஆம் நூற்றாண்டு வாக்கில் இந்தியாவிலும் குடியேறினர். அவர்கள் குஜராத்தில் அதிக எண்ணிக்கையில் வசித்து வருகின்றனர். நாட்டின் பிரதமராகும் முன்பே தாவூதி போரா சமூகத்தினருடன் மோடி நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், எகிப்தில் தாவூதி போரா சமூகத்தினரைப் பிரதமர் மோடி சனிக்கிழமை சந்தித்துப் பேசினார். அவர் தங்கியுள்ள விடுதியில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அப்போது கையில் மூவர்ணக் கொடியை ஏந்தியவாறு தாவூதி போரா சமூகத்தினர் விடுதிக்கு வந்தனர். எகிப்தில் வசித்து வரும் இந்திய சமூகத்தினரையும் பிரதமர் மோடி சந்தித்துப் பேசவுள்ளார்.

**இருதரப்பு பயணங்கள்:** பிரதமராகப் பதவியேற்ற பிறகு மோடி எகிப்துக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை. இந்தியப் பிரதமர் எகிப்துக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்வது கடந்த 26 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும். எகிப்து அதிபர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட 6 மாதத்துக்குள் பிரதமர் மோடி எகிப்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஜி20 கூட்டமைப்பின் நடப்பாண்டு தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ள நிலையில், வரும் செப்டம்பரில் தில்லியில் நடைபெறவுள்ள மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளுமாறு எகிப்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதில் பங்கேற்பதற்காக எகிப்து அதிபர் எல்-சிசி மீண்டும் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

# இந்தியத் திறமையும் அமெரிக்கத் தொழில்நுட்பமும் எதிர்காலத்தை வளமாக்கும்

## தொழில் நிறுவனத் தலைவர்களுடனான கூட்டத்தில் பிரதமர் மோடி

**வாஷிங்டன், ஜூன் 24:** இந்திய இளைஞர்களின் திறமையும் அமெரிக்காவின் நவீன தொழில்நுட்பங்களும் ஒன்றிணைந்தால், எதிர்காலம் வளமானதாக மாறும் எனப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, வெள்ளை மாளிகை அதிகாரிகள், தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடனான கூட்டத்தில் வெள்ளிக்கிழமை கலந்துகொண்டார். அப்போது அதிபர் ஜோ பைடனும் உடனிருந்தார்.

அக்கூட்டத்தில்மைக்ரோசாஃப்ட் சிஇஓ சத்யா நாதெல்லா, கூகுள் சிஇஓ சுந்தர் பிச்சை, ரிலையன்ஸ் தலைவர் முகேஷ் அம்பானி, மஹிந்திரா தலைவர் ஆனந்த் மஹிந்திரா, விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல், அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் தரண்ஜித் சிங் சாந்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பிரதமர் மோடி கூறியதாவது:

தொழில்நுட்பத் துறையில் அதிபர் ஜோ பைடனின் தலைமையில் அமெரிக்கா பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. இந்திய இளைஞர்கள் தங்களது திறமையால் தனி அடையாளத்தை உருவாக்கிக் கொண்டுள்ளனர். அவ்வாறான சூழலில், இந்திய இளைஞர்களின் திறனும் அமெரிக்காவின் நவீன தொழில்நுட்பமும் ஒன்றிணைந்தால், சிறந்த எதிர்காலம் உருவாகும்.

இந்தியாவில் தற்போது பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் பங்கெடுக்க தொழில் நிறுவனங்கள் முன்வர வேண்டும். இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இதுதான் சிறந்த தருணம்.

**இந்தியாவின் வலிமை உலகின் வலிமை:** அமெரிக்க அரசுமுறைப் பயணத்தில் இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விண்வெளி, பாதுகாப்பு, விமானப் போக்குவரத்து, தகவல்-தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியாவும் அமெரிக்காவும் நம்பத்தகுந்த கூட்டாளிகளாக மாறியுள்ளன. இந்த வாய்ப்பைத் தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.




வாஷிங்டனில் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன்.

அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சுமார் 12,500 கோடி அமெரிக்க டாலரை இந்தியா செலவிடவுள்ளது. இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் அமெரிக்காவுக்கு எண்ணற்ற வாய்ப்புகள் காணப்படுகின்றன. இந்தியா வலிமையாகத் திகழ்ந்தால், ஒட்டுமொத்த உலகமும் அதன் மூலமாகப் பலனடையும். கரோனா தொற்று பரவல் காலத்தில் இது கண்கூடாகத் தெரிந்தது. உலக நாடுகளுக்கு மருந்துப் பொருள்கள் தேவைப்பட்டபோது, அவற்றை இந்தியா அதிக அளவில் விநியோகித்தது.

**இந்தியாவுடன் இணைந்தால் பலனடையலாம்:** இந்தியாவின் பெரும் வெற்றிக்கு மக்களே முக்கியக் காரணமாக உள்ளனர். கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் அமெரிக்க நிறுவனங்கள் சுமார் 1,600 கோடி டாலரை இந்தியாவில் முதலீடு செய்துள்ளன. உலகின் இளமையான நாடாகத் திகழும் இந்தியா, திறன்மிக்க இளைஞர்களின் பட்டாளத்தையும் கொண்டுள்ளது. இந்தியாவுடன் ஒருங்கிணைந்து செயல்படும் நாடுகள் அனைத்தும் நிச்சயம் பலனடையும்.

இந்தியாவில் நிதிப் பற்றாக்குறை கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது. மூலதன செலவினம் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகிறது. ஏற்றுமதியும், அந்நியச் செலாவணி கையிருப்பும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதில் புதிய சாதனைகள் படைக்கப்பட்டு வருகின்றன என்றார் பிரதமர் மோடி.

**இடையூறுகளுக்குத் தீர்வு:** அதிபர் ஜோ பைடன் கூறுகையில், "இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான நல்லுறவை நிர்ணயிப்பதில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்பாட்டில் நிலவும் இருதரப்பு ஒத்துழைப்பு முக்கியப் பங்கு வகிக்கும். உலக மக்களின் நலனுக்காக நவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயல்படவுள்ளன.

இதற்காக, இருநாடுகளின் விண்வெளி வீரர்கள், தொழில்முனைவோர்கள், விஞ்ஞானிகள், மாணவர்கள் உள்ளிட்டோரை உள்ளடக்கிய தனித்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. நவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் இரு நாடுகளின் தனியார் துறையும் முக்கியப் பங்கு வகிக்கும்.

புத்தாக்கத்தையும் ஒத்துழைப்பையும் அடுத்தகட்டத்துக்கு இரு நாடுகளும் எடுத்துச் செல்கின்றன. தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் இரு நாடுகளுக்கு இடையே நிலவி வரும் ஒத்துழைப்புக்கு சில இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன. அவற்றைக் களைவதற்கான நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**உலகுக்கே பலன்:** இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான நல்லுறவானது இருநாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலக மக்களுக்கும் பலனை அளிக்கும். பருவநிலை மாற்ற விவகாரத்துக்குத் தீர்வு காண்பது, விண்வெளிசார் ஆய்வுகளை மேற்கொள்வது, ஏழ்மையை ஒழிப்பது, புற்றுநோய் உள்ளிட்ட நோய்களுக்குத் தீர்வுகாண்பது, நோய்த்தொற்று பரவலைத் தடுப்பது, மக்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படவுள்ளன.

21-ஆம் நூற்றாண்டை நிர்ணயிப்பதில் இந்தியா-அமெரிக்கா இடையேயான நல்லுறவு முக்கியப் பங்கு வகிக்கும். அதில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு முக்கியத்துவம் பெறும்' என்றார்.